கூட ஆலோசனை கேட்டார்கள், அதைப்பற்றி அவர்களிடத்தில் இடம் வேண்டுமென்றால் பரிசீலித்து தருவதாக பேச்சளவில் ஒத்துக்கொண்டேன். அதுபற்றித் திட்டவட்டமான பரிசீலனை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

*249 வினா—திரு. **த. சோனையா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வலையர் வகுப்பினை அரிசன மக்கள் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

கோணப்பராயன்குளம் கிராமத்தில் சாலை வசதி

*250 வினா—திரு. **பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுப்பாதை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, குளித்தலை வட்டம் ரெங்கநாதபுரத்தில் சிற்றூரான கோணப்பராயன்குளம் கிராமத்தில் குடியிருக்கும் அரிசன மக்களுக்கு சுடு காட்டுக்கு செல்ல பாதை அமைப்பதற்காக 7 சென்ட் நிலத்தை ஆர்சிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசினால்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1975 மார்ச் 8]

ஏற்கப்பட்டு 1974-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்சித நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது எதிர் மனுத் தாக்கல் செய்யப்பட்டதா? அப்படியென்றால் அதன் விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு (டபிள்யூ. பி. 3726/74) மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்சித நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எதிர் ஆணை உறுதிப் பத்திரம் (Draft Counter Affidavit) மாவட்ட ஆட்சியாளரின் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் எதிர் ஆணை உறுதிப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு :**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக்குறிக்கும்.)

2. நடைமுறைக் கேள்வி.

பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுவதற்கே டைம் இருக்காது, எனவே பாயிண்ட் ஆஃப் ஆர்டர்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள்.